## சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் – பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– உயர்த்தி வழங்குதல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த்துறை

அரசாணை (நிலை) எண்.47 நாள்:04.09.2015

மன்மத வருடம், ஆவணி 18

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த்துறை, நாள் 24.08.2009.
2. அரசாணை (நிலை) எண்.103, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜ1)த்துறை, நாள் 25.03.2013.
3. அரசாணை (நிலை) எண்.66, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, நாள் 01.10.2014.
4. சிறுபான்மையினர் நலத்துறை ஆணையரின் கடித எண்.பி3/1748/2015, நாள் 16.06.2015.

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள் மற்றும் அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட 18 வயது நிரம்பிய 60 வயதுக்குமேற்படாத நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டு "உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" அமைத்தும், வாரியத்தில் உறுப்பினர் சேர்த்தல் மற்றும் உறுப்பினர்களுக்கு நல உதவிகள் வழங்கவும், அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்குவது போன்று கல்வி உதவித் தொகைகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்றத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட